<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 392/2015**
<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>
<u>வாக்குமூலம் – வா.சா–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | துரைசாமி | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | தாராபுரம் | நாள் | : | 06.02.2023 |

1987 ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2023 ஆண்டு பிப்ரவரி 06 ம் நாள் சாட்சியம்.

---

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. (**வா.சா.ஆ.1**) ஆவணத்தின் அசல் என்னிடம் இல்லை என்றால் உள்ளது, நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணம் தாராபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் 264/1995 ஆக பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். நான் கிரையம் வாங்கிய (**வா.சா.ஆ.1**) ஆவணத்தின் சரத்துக்களை நான் ஒப்புக்கொள்கிறேன் அதன்படி நடந்து கொள்ள தயாராக இருக்கிறேன். என்னுடைய பூமிக்கு வடபுறமாக பிரதிவாதியின் பூமி உள்ளது என்றால் ஆமாம்.

2. பிரதிவாதியின் பூமிக்கு மெயின் ரோட்டிலிருந்து தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். நான் ஆறுமுகம் என்பவரிடம் இருந்து தான் கிரையம் வாங்கினேன். ஆறுமுகம் என்பவர் எப்போது கிரையம் வாங்கினார் அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது எனது பூமியில் எந்த தொழிலும் செய்யவில்லை. தங்கவேலு என்பவரிடம் இருந்து எனக்கு கிரையம் கொடுத்த ஆறுமுகம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். எனக்கு

எழுதிக்கொடுத்த பூமி மற்றும் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பூமி இரண்டும் ஆதியில் ஒரு பேச்சிமுத்து என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

3. (**வா.சா.ஆ.1)** ஆவணத்தில் எனது பூமியின் கிழக்கோட்டில் தென்வடலாக தடம் செல்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 1 ஆவணத்தில் உள்ளவாறு தடம் இன்று வரை நிலையில் உள்ளது என்றால் உள்ளது.

**வழக்கறிஞர் வேண்டுதலின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Mathivathani Vanangamudi.,
District Munsif,
Dharapuram.